


ந.க.எண் 418/2023 நாள். 01.07.2024.

பொது வகைப்பாடு அரசு புறம்போக்கு நிலத்தில் வெள்ளாளர் சமூகத் தகுதிச் சான்று கோரி 2022 ITCP/கால் 01&02.2023 5 SWP/DTCP/DINDIGUL/LAY OUT NO. 29/2023 நாள். 28.04.2023ன் படி மனுச் செய்த ஆதிதிராவிட மக்களில் அயல்வகைக் கை வகையாக மனு தீர்மான எண் 35/2024 நாள் 28.06.2024ன் படி அரசுக் கிராம் புல எண் 1380/3B&4 1450 சதுர அடி (1 வீட்டுமனை) மற்றவர்களில் வேறுபடுத்தி வகைப்படுத்தி வழங்கப்படுகிறது.


செயல் அலுவலர்,
பேரூராட்சி அலுவலகம் (தேர்வு நிலை)
சித்தையன்கோட்டை,
திண்டுக்கல் மாவட்டம்.-624708.

இரா.இராஜேஸ்குமார்
அளவர் / உதவிவரைவாளர்

Document certified by Rajeshkumar
Signed by Deputy Director
Location Date 2023.55.54

வெ.குரு பிரீத்தி
கட்டிடக்கலை / திட்ட உதவியாளர்

Scanned with CamScanner



செயல் அலுவலர்,
பேரூராட்சி அலுவலகம் (தரம் உயர்த்தப்பட்ட)
சித்தையன்கோட்டை,
திண்டுக்கல் மாவட்டம்.-624708.

இரா.ராஜேஸ்குமார்
தளவர் / உதவிவரைவாளர்

வெ.குரு பிரீத்தி
கட்டிடக்கலை / திட்ட உதவியாளர்

SWP / DTCP DINDIGUL LAYOUT NO : 50 / 2023

துணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திண்டுக்கல் மாவட்டம்

Scanned with CamScanner

சித்தையன்கோட்டைபேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

ஆணையிடுபவர் : திரு.சோ.சிவகுமார்,பி.எஸ்.சி.,

ந.க. எண் : 618/2023 நாள் : 01.07.2024.

பொருள் : மனைப்பிரிவு அங்கீகரித்தல் – திண்டுக்கல் மாவட்டம் – சித்தையன்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சி – ஆத்தூர் கிராமம் – சர்வே எண்.1380/3B (1.00 ஏக்கர்) பரப்பளவில் அமைந்துள்ள 20 மனைபிரிவுகளுக்கான– தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது – இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. துணை இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் அவர்களின் கடித ந.க.எண். SWP/DTCP/DINDIGUL/Layout No 50/2023 நாள்.28.04.2023 மற்றும் கடிதம் எண்.YIZSAHVJ/2022/TCP, நாள்.28.04.2023
2. ஆத்தூர் சார்பதிவக தானப்பத்திர பதிவு எண்.648/2023, நாள்.21.03.2024 மற்றும் 2469/23, நாள்.26.12.2023
3. சித்தையன்கோட்டை பேரூராட்சி மன்றத் தீர்மான எண். 35, நாள் 28.06.2024
4. தொடர்புடைய ஆவணங்கள்

உத்திரவு:

திண்டுக்கல் மாவட்டம், சித்தையன்கோட்டை பேரூராட்சி ஆத்தூர் கிராமம் 1380/3B 4050.00 ச.மீ (1.00 ஏக்கர்) பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு கொண்ட இடத்தில் பார்வை 1ல் காணும் துணை இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் அவர்களின் கடிதத்தில் 20 மனைகளுக்கு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது. மேலும் பார்வை–2ல் கண்ட பத்திரங்களின் படி சாலைகள் , பொது இடம் மற்றும் மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை தானமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பார்வை–1ல் கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சாலை வசதி, வடிகால் வசதி, குடிநீர் வசதி (பைப் லைன்) மற்றும் தெருவிளக்கு வசதி (மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்தப்பட்டுள்ளது) ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகைகள் மற்றும் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையினை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பார்வை–3ல் கண்ட இப்பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.35 நாள்.28.06.2024ன் படி இறுதி ஒப்புதல் வழங்க மன்றம் அங்கீகரித்துள்ளது. எனவே உள்ளாட்சி அமைப்புக்கு தானமாக ஒப்படைப்பு செய்து, மனைப்பிரிவு சாலையினை தார்ச்சாலை (Block Topping) தன்மை கொண்டு அமைத்தும், சாலைகளின் ஓரங்களில் நிர்ணயிக்கப்பட்ட மட்டத்திற்கும், அகலத்திற்கும் ஏற்ப அமைக்கப்பட்டதின் அடிப்படையிலும், மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த தெரிவிக்கப்பட்ட கட்டணத் தொகைகளை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளதையும் ஏற்று, பார்வை–1ல் கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையிலும் மேற்கண்ட புல எண்ணில் அமைந்துள்ள 20 மனைகளுக்கும் மனைப்பிரிவு அங்கீகரித்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1) துணை இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் அவர்களின் மனைபிரிவு தொழில்நுட்ப அனுமதியில் குறிப்பிடப்பட்ட (1968/2022/தி.மா.3, நாள்.07.07.2022)ல் குறிப்பிடப்பட்ட சிறப்பு நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
2) பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட சாலைகள் , மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் மற்றும் பொது திறவிடங்களில் உள்ள இடத்தினை மனைகளாக பிரித்து ஏதும் விற்பனை செய்யக் கூடாது.

.....2

Scanned with CamScanner

3) இவ்வுத்திரவுடன் துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட 20 மனைகளுக்கான வரைபட ஒப்புதல் நகல் உரிய அனுமதி வழங்கி இணைத்து அனுப்பப்படுகிறது.
4) வரன்முறைபடுத்தப்பட்ட 20 மனைகளை பிரித்து விற்கக் கூடாது
5) தொழில்நுட்ப அனுமதியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறும்பட்சத்திலோ, ஆவணங்கள் ஏதும் சட்டத்திற்கு புறம்பானது என கண்டறியப்பட்டாலும், இவ்வுத்திரவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை கடைபிடிக்க தவறினாலோ தங்களுக்கு வழங்கப்பட்ட இவ்வுத்திரவு எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

செயல் அலுவலர்,
சித்தையன்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சி
திண்டுக்கல் மாவட்டம்.

இணைப்பு :

- வரைபடம்.

பெறுநர் :

திரு.கே.திருமலைச்சாமி,
48, டிரசரி காலணி, மெயின் ரோடு, ஒட்டன்சத்திரம்.

நகல் :

- துணை இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், க.எண்.14, விவேகானந்தா நகர், திண்டுக்கல் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.
- திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
- சார்பதிவாளர், ஆத்தூர் சார்பதிவகம்.
- இருப்பு கோப்பிற்கு.

Scanned with CamScanner